1973 நவம்பர் 23]

நிரந்தரமாகத் தண்ணீர் கிடைக்க மதிப்பீடு தயாரிக்கப்பட்டதே, அது பரிசீலனையில் இருக்கிறதா என்கிற விவரத்தை அறியலாமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, நகரசபை மூலமாகத் தண்ணீர் வழங்கும் ஏற்பாடு நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது. ஏற்கனவே சில நேரத்தில் குறைபாடு ஏற்பட்ட நேரத்தில் நகரசபைக்குத் தெரிவிக்கப்பட்டு போதுமான தண்ணீர் அண்மையில் கிடைத்திருக்கிறது என்ற பதில் தந்திருக்கிறார்கள். ஒருவேளை மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் போய்ப் பார்த்த பொழுது தண்ணீர் கிடைக்காமல் இருந்து, மறுபடியும் கிடைக்கும் நல்ல நிலை ஏற்பட்டிருக்கலாம்.

தீவிர குடும்பக்கட்டுப்பாடு திட்டங்கள்

***333 வினா—திரு. கே. என். குமாரசாமி :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) Intensive Family Planning ஜில்லா கலெக்டர் தலைமையில் இதுவரை எந்தெந்த மாவட்டங்களில் நடத்தப் பட்டிருக்கிறது ?

(இ) அதுவன்றி, கிராமாந்திரங்களில் ஹெல்த் டிபார்ட் மெண்ட் மூலமாக ஒரு Family Planning திட்டம் நடத்தப் பட்டு வருகிறதா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) & (இ) சட்டமன்றப் பேரவை முன் விவர அறிக்கை @ ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

திரு. ஆ. பரந்தாமன் : தலைவரவர்களே, குடும்பநல தீவிரத் திட்டத்திற்காக மத்திய அரசு 50 சதவிகிதம் மானியத்தைக் குறைத்துவிட்டதாகச் செய்தி வந்தது. அதற்குப் பிறகு ஒருசில நாட்களுக்கு முன்னால் மத்திய அரசின் அமைச்சர் ஒருவர் எல்லா மாநிலங்களும் தீவிரமாக இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டுமென்று அறிவித்திருக்கிறார்கள். அதுகுறித்து ஏதாவது தகவல் மாநில அரசுக்கு வந்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, மத்திய அரசுக்கு ஏற்பட்ட எதிர்பாராத நிதிநிலை நெருக்கடி காரணமாக குடும்பநலத் திட்டத்திற்கு ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வந்த

@ 138-139-ம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

முழுச்செலவில் ஒரு பகுதியை இந்த ஆண்டு வழங்க இயலாது என்று முதலில் தெரிவித்தார்கள். பிறகு அந்த வெட்டு இல்லை என்று அறிவித்தார்கள். வெட்டு இல்லை என்று அறிவித்தார்களே தவிர அந்தத் துறையிலே எந்தெந்தப் பதவிகள் நிரப்பப்படாமல் இருக்கின்றனவோ, அந்தப் பதவிகளை நிரப்பக் கூடாது என்று விதித்திருக்கிறார்கள். ஆகவே, வெட்டு இல்லை என்று சொன்னாலும் கூட செயல்முறையில் வெட்டு உண்டு. அதைப்போலவே, தீவிரத் திட்டத்திற்கு, முனைப்பு இயக்கத்திற்குத் தனிச் சலுகையாக வழங்கிய தொகை ரூ. 100 வீதம் இப்பொழுது வழங்கப்படவில்லை. ஆகவே, தமிழக அரசு 50 இலட்சம் ரூபாயை முனைப்பு இயக்கத்திற்காக ஒதுக்கி இயன்ற அளவிற்கு அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு முயற்சி செய்கிறது.

திரு. த. சோலையா : தலைவரவர்களே, இந்தக் குடும்பக் கட்டுப்பாடு திட்டம் தமிழகத்திலேதான் மிகத் தீவிரமாக நடைபெறுகிறது. இப்படி அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதால் பாராளுமன்றத்தில் நமக்குக் கிடைக்கும் இடங்களில் ஒருசில இடங்கள் குறைந்துவிடும் என்று பலரும் கருத்து தெரிவிக்கிறார்கள். அதுபற்றி அரசு என்ன கருத்தை அறிவிக்க இருக்கிறது?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, தமிழகத்திற்குக் கிடைக்கும் இடம் குறைந்துவிடுகிறது என்று நாம் சொல்லும்பொழுது அது மட்டுமே காரணம் அல்ல என்று மத்திய அரசு கூறுகிறது. மராட்டியத்திலும் இந்தத் திட்டம் நம்மைவிட இன்னும் அதிகமான அளவில் நடைபெறுவதாகப் புள்ளி விவரங்கள் கூறுகின்றன. பாராளுமன்றத்தில் இடம் குறைந்து விடுகிறது என்பது தமிழ்நாட்டினுடைய பொதுவான பிரச்சினை. ஆனால் குழந்தைகள் அதிகமானால் வீட்டுக்கு வீடு இடம் குறைந்து விடுகிறது என்பது சமுதாயத்திற்கே நெருக்கடி தரும் பிரச்சினை.

திரு. எம். சுரேந்திரன் : சார், குழந்தைகளைப் பெறுவது என்பது முன்பெல்லாம் தங்களுடைய இஷ்டத்திற்கும், இன்பத்திற்கும் தங்களுடைய உரிமைகளை நிலை நாட்டவும் என்று கருதப்பட்டு வந்தது. இப்பொழுது சமுதாயத்தின் நலன்களை எதிர்பார்த்து குழந்தைகளைப் பெற வேண்டுமென்ற கட்டளை பிறப்பிக்கப்படுமா?

1973 நவம்பர் 23]

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, ஜனநாயகத்தில் அரசாங்கம் பலவற்றை வேண்டுகோளாகத்தான் சொல்ல முடியும். அவர்களுக்கு இருக்கும் அறிவுத் திறனைக் கொண்டு தங்களுடைய வாழ்க்கையிலே இதனைக் கட்டளையாக மேற்கொள்ளலாம்.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, இந்தக் குடும்பநலத் திட்டத்தின் கீழ் அறுவை சிகிச்சை செய்துகொள்ள முன் வருபவர்கள் பலர் எல்லா மாவட்டங்களிலும் பெரும்பாலும் ஆண்கள்தான். தென் ஆர்க்காடு, தஞ்சை மாவட்டங்களிலே மட்டும் வெகுசில பெண்கள் குடும்பநலத் திட்டத்தின்கீழ் அறுவை சிகிச்சை செய்து கொண்டிருக்கிறார்கள். எனவே, பெண்களுக்கும் அந்தத் திட்டத்தை அரசு விஸ்தரிக்குமா? அவர்களும் இதில் பங்கு பெற்று இந்தத் திட்டத்தை வெற்றி பெறச் செய்வதற்கு அரசு புதிய திட்டத்தை ஏதாவது வகுப்பதற்கு முன்வருமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, இந்த நிரந்தரமான கருத்தடை சிகிச்சையில் ஆண்களுக்கு நடைபெறும் சிகிச்சை மிக எளிதானது. ஏறத்தாழ 5 நிமிடங்கள் அல்லது 10 நிமிடங்களில் அந்தச் சிகிச்சை முடிந்து விடுகிறது. பெண்களுக்கான சிகிச்சை சற்று நேரமாகக் கூடியது. அந்த அறுவை சிகிச்சை அதிகத் திறமையுடையவர்களால்தான் நடத்தப்பட முடியும். ஆகவே, நிரந்தர கருத்தடை சிகிச்சை செய்து கொள்ள வேண்டுமென்று அறிவுறுத்தும் பொழுது ஆண்களுக்குச் செய்வது எளிதாக நிறைவேறுகிறது. பொதுவாக, ஆண்களால் ஏற்றுக்கொள்ளப்படும் நிலை அதிகமாக இருக்கிறது. இரண்டாவது, ஆண்களுக்குச் செய்யும்பொழுது கிடைக்கும் பயன் சற்று அதிகம் என்ற சமுதாயக் காரணமும் அதற்குக் காரணமாகும்.

திரு. எஸ். வடிவேல் : தலைவரவர்களே, இந்தக் குடும்ப நலத் திட்டத்தின் மூலம் அறுவை சிகிச்சை நடைபெறுவதில் தரகர்கள், ஏஜெண்டுகள் ஆகிய பலபேர்களுக்கும் பணம் செலவாகிறது. அப்படியில்லாமல் செய்து கொள்பவர்களுக்கே பணம் அதிகமாகக் கொடுக்க முன்வருமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, அவரவர்கள் தாங்களாகவே முன்வந்து செய்துகொள்ளும் சமுதாயத்தை அங்கத்தினர் போன்றவர்கள் உருவாக்கினால் இடையிலே தரகர்கள் தேவைப்படமாட்டார்கள். இந்த நாட்டிலே நல்லதைச் செய்யக் கூட தரகர்கள் தேவைப்படுகிறார்கள்.

திரு. கு. காமாட்சி : தலைவரவர்களே, இந்தக் குடும்ப நலத் திட்டத்தை நிறைவேற்றுவதில் 1971-72 ஆம் ஆண்டில் தென்னார்க்காடு மாவட்டமும், 1972-73 ஆம் ஆண்டில் தஞ்சை மாவட்டமும் முதன்மையிடம் பெற்றிருக்கின்றன. ஆகவே, அவை களுக்கு ஊக்குவிக்கும் முறையில் சிறப்புப் பரிசுத் திட்டம் ஏதாவது வழங்க உத்தேசமுண்டா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, இந்தக் குடும்பநலத் திட்டத்தை அந்த மாவட்ட மக்கள் அதிகமாகச் செய்துகொள்ளுகிற காரணத்தால், அந்த மாவட்டங்கள் பொருளாதாரத்தில் முன்னேறுவதற்கான வாய்ப்புகளைப் பெறுகின்றன. அதுவேதான் அதற்குப் பரிசு.

Palar water for Tambaram

* 334 *Q*.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether there is any proposal under the consideration of the Government to bring Palar Water to Tambaram by the Tambaram Municipality; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) & (இ) தாம்பரம் நகராட்சிக்குப் பாலாற்றிலிருந்து நீரைக் கொண்டு வருவதற்கான முதல் திட்டம் நிறைவேற்றப்பட்டு, 1968-லிருந்து செயல்பட்டு வருகிறது.

திரு. என். டென்னிஸ் : தலைவரவர்களே, அதற்கு அடுத்த படியான திட்டம் எப்பொழுது செயற்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, பாலாற்றி லிருந்து தண்ணீர் கொண்டுவரும் திட்டம்பற்றி கேட்டதால் அவ்வாறு தெரிவிக்கப்பட்டது. நகரத்திற்கு எல்லாப் பகுதி